முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1593

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.02.2024**, வியாழக்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா போற்றி
கலியுகத்தைக் காக்கவந்த தேசிகா போற்றி
பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
பிரணவக்குடில் படைத்த குருராஜனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 25 ம் நாள், 08.02.2024, வியாழக்கிழமை)
உற்றதொரு அரங்கன் உன் மாதர்மமே
உலகத்தை மீட்டு காத்தருள் புரியும்
3. ஆற்றல்மிக்க அரங்கன் உன் உபதேசமே
அகிலத்தார்க்கு அழியாமை என்கின்ற ஞானம் தரும்
ஞானம் தரவல்ல உன் சக்திக்குள்ளே
ஞானபண்டிதன் பரிபூரணமாய் இருந்து
4. வானவர்கள் துணைபட இனிதே
வையகத்தை தர்மவழி வழி நடத்தி வருகின்றேன்
வருகவே அரங்கன் உன் தொடர்பு கொண்ட அனைவருக்கும்
ஆறுமுகன் என் ஆசி துணை பரிபூரணமாய் உண்டுஉண்டு
5. வருங்காலம் அரங்கன் உன் தொண்டர்படை மூலம்தான்
வையகத்தில் பெருமாற்றம் நிகழ இருக்க
தருகின்ற குணமோடு அரங்கன் தொண்டர்கள்
தக்கபடி அன்னதான சேவையாற்றி
6. சேவையாற்றி உலகெல்லாம்
பசிபிணி கொடுமை இல்லாத
செப்பிடுவேன் யோகமாக மாற்ற
வகைபட ஆறுமுகன் யான் ஆற்றலாக இறங்கி

7. அரங்கன் அவதார நோக்கத்தின் பலனாக
மாற்றத்தை உலகுக்கு தந்தருள்புரிவேன்
மகான் சுப்ரமணியப் பெருமான் யான்
அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—